**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.82/2021**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரணன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**27.03.2024**

**முதல் விசாரணை**

நான் குசவன்குண்டில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் குசவன்குண்டு ஊராட்சிமன்ற தலைவராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 11.11.2014 அன்று ஊராட்சிமன்ற தலைவராக அலுவலகத்தில் எனது பணியில் இருந்த போது ஆஜர் எதிரிகள் இரண்டுபேரும் வந்து காலை 10 மணியளவில் எனது அலுவலகத்திற்கு உள்ளே வந்து உட்கார்ந்தார்கள். என்ன விஷயம் என்று எதிரிகளிடம் கேட்ட போது எனது குடிநீர் குழாயை ஏன் அடைத்தீர்கள் என எதிரிகள் கேட்டார்கள். அதற்கு நான் நீங்கள் பள்ளம் தோண்டியும் மோட்டார் வைத்தும் குடிநீர் பிடிக்கீறிர்கள் அது பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது என்று கூறினேன். அதற்கு உடனே எதிரிகள் இரண்டு பேரும் குடிநீர் இணைப்பு உடனடியாக தருமாறு கேட்டார்கள். அதை எழுத்துபூர்வமாக தருமாறு நான் சொன்னேன். எதிரிகள் இரண்டு பேரும் அப்படி எல்லாம் தரமுடியாது என்று சொல்லி உன்னை கோடாரியால் வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியும் தகாத வார்த்தைகளால் என்னை திட்டினார்கள். எனக்கு அன்று நிறைய பணி இருந்ததால் மறுநாள் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**